**செய்தி வெளியீடு எண் : 687** **நாள்: 28.04.2022**

**<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்</u>**

**<u>பிரேசில் நாட்டில் நடைபெறவுள்ள 24–ஆவது கோடைக்கால செவித்திறன் மாற்றுத் திறனாளி களுக்கான ஒலிம்பிக்–2022 போட்டி தமிழ்நாடு வீரர்கள் 6– பேர் தேர்வு</u>**

**<u>மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் வாழ்த்து...</u>**

பிரேசில் நாட்டின் கேசியாஸ் டோசுல் (CAXIAS DOSUL – BRAZIL) என்ற நகரில் 24–ஆவது கோடைக்கால செவித்திறன் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக்–2022 போட்டிகள் ($24^{th}$ SUMMER DEAFLYMPICS – BRAZIL – 2022) வருகிற 2022 மே மாதம் 1–ஆம் தேதி முதல் 15–ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இப்போட்டியில் பங்கேற்க செல்லும் இந்திய அணியில் தமிழ்நாட்டை சார்ந்த நீச்சல் வீராங்கனை ஆர்.சினேகா, தடகள வீராங்கனை சமீகா பர்வீன் முஜிப், இறகுப்பந்து வீராங்கனை ஜெர்லின், டென்னிஸ் வீரர் பிரித்வி சேகர், தடகள வீரர்கள் மணிகண்டன் மற்றும் சுதன்ராஜேந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். தேர்வு செய்யப்பட்டுள்ள வீரர்களுடன் டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர் திரு.மூர்த்தி, முதன்மை டென்னிஸ் பயிற்சியாளர் டாக்டர். ஸ்டாலின், நீச்சல் பயிற்சியாளர் திரு.ஸ்ரீதர் ஆகியோரும் பிரேசில் செல்கின்றனர். இப்போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய அணி வருகிற 29–ஆம் தேதி டெல்லியிலிருந்து புறப்பட்டு பிரேசில் செல்கிறது.

"போட்டியில் பங்கேற்க செல்லும் தமிழ்நாடு வீரர் – வீராங்கனைகள் அனைவரும் அனைத்துப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி தங்கப் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்க வேண்டும். தமிழ்நாட்டின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசு சார்பிலும், விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பிலும், அனைத்து தமிழ் மக்கள் சார்பிலும், விளையாட்டு வீரர் – வீராங்கனைகள் சார்பிலும் வாழ்த்துகிறேன்" என மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in